## இளைஞர்கள் போராட்டம்:

# இந்தியாவுக்கு வழிகாட்டிய திராவிடம்!

கண்ணீர்ப் புகை வீசியும்கூட அந்தக் கூட்டத்தைக் கலைக்க முடியவில்லை. தடியடி நடத்தினால் இளைஞர் கூட்டம் கலைந்து ஓடிவிடும் என நினைத்து லத்தியை சுழற்றுகிறது டெல்லி காவல் துறை. சிதறிய இளைஞர்களில், ஓர் இளைஞர் மட்டும், காவலர்களின் முன்பாகக் கம்பீரமாக நின்று, உரிமைக் குரல் எழுப்புகிறார். சிதறிய இளைஞர் பட்டாளம் ஆண்களும் பெண்களுமாக மீண்டும் திரும்புகிறது. நியாயக் குரல் எழுப்புகிறது.

**தலைநகர் டெல்லியில் நாடாளுமன்ற வளாகம் அருகே ஜூலை 20 அன்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய போராட்டத்தில் கண்ட காட்சி, 1989ல் சீனாவின் தியான்மென் சதுக்கத்தில் இராணுவ டாங்கிகளை எதிர்கொண்டு நின்ற ஒற்றை இளைஞனின் தோற்றத்தை நினைவுபடுத்தியது.**

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லியில் நடத்திய போராட்டம் என்பது ‘நீட்’ தேர்வு மோசடிகளுக்கும், இந்தியாவின் கல்விக் கொள்கைகளுக்கும் எதிரானது. உச்சநீதிமன்ற வழக்கு ஒன்றின் விசாரணையின்போது நீதிபதி அவர்களால், ‘கரப்பான்பூச்சிகள்’ என்ற சொல் விமர்சனக் கருத்தாக வெளிப்பட்டது. அந்தச் சொல்லையே, தங்கள் கட்சிக்கானப் பெயராக மாற்றிய இளைஞர்கள், கரப்பான் பூச்சி ஜனதா கட்சி என்ற பெயரில் போராட்டத்தைத் தொடங்கி, பாரதிய ஜனதா கட்சி அரசை கிடுகிடுக்க வைத்திருக்கிறார்கள்.

**பா.ஜ.க. ஆட்சியில்தான் ‘நீட்’ தேர்வு 2017ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்டது. மருத்துவப் படிப்புக்கான தேசிய அளவிலான நுழைவுத் தேர்வான ‘நீட்’, மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைத்து, அவர்களின் உயிரைப் பறித்து, மாநில அரசின் கல்வி உரிமைகளையும் பறிபோகச் செய்கிறது என்று எச்சரித்து அப்போதே போராட்டக் களம் கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து, இந்திய அளவில் ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டம் விரிவடைந்திருக்கிறது.**

அரியலூர் மாணவி அனிதா தொடங்கி, தொடர்ச்சியாக பல மாணவமாணவியரின் மருத்துவக் கனவை சிதைத்து, அவர்களின் உயிரைக் குடித்தக் கொடூர நீட் தேர்வு முறைக்கு எதிராக, தி.மு.க.வின் இளைஞரணியும் மாணவரணியும் தமிழ்நாடு முழுவதும் ‘நீட்’ எதிர்ப்புக் கருத்தரங்குகளை நடத்தின. கழகத்தின் சார்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ‘நீட்’ தேர்வு விலக்கு சட்டமுன்வரைவைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டதாக ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் கூறினார். எதிர்க்கட்சியான தி.மு.க.தான் அப்போதும் ‘நீட்’ தேர்வை எதிர்த்து உறுதியுடன் போராடியது.

2021ல் கழகத் தலைவர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமைந்தது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து, ‘நீட்’ விலக்கு சட்டமுன்வரைவு இரண்டு முறை நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் மாளிகையில் அதனைத் தூங்க வைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆளுங்கட்சியான பிறகும், ‘நீட்’ தேர்விலிருந்து



விலக்கு அளிக்கக் கோரி உண்ணாநிலைப் போராட்டம் உள்பட பல்வேறு களப் போராட்டங்களை தி.மு.க. முன்னெடுத்தது.

**தமிழ்நாடு மட்டும்தான் ‘நீட்’ தேர்வை எதிர்க்கிறது என்றும், தி.மு.க.தான் எதிர்ப்பைத் தூண்டிவிடுகிறது என்றும், மற்ற மாநிலங்கள் அனைத்தும் ‘நீட்’ தேர்வை ஆதரிக்கின்றன என்றும் சித்தாந்த எதிரிகளும், அவர்களின் மகுடிக்கு மயங்கியவர்களும் தி.மு.க. மீது பழி போட்டார்கள். தி.மு.க. முன்னெடுத்த ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டத்தைத்தான் இந்தியத் தலைநகரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி கையில் எடுத்தது. இதைத்தான் அன்றே தொலைநோக்குப் பார்வையுடன் தி.மு.க. செய்தது.**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி முன்னெடுத்தப் போராட்டத்தில் நாடறிந்த சமூக செயற்பாட்டாளரான சோனம் வாங்சுக் 20 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து, கைது செய்யப்பட்டு, வலுக்கட்டாயமாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். பல மாநிலங்களிலிருந்தும் டெல்லியில் திரண்ட இளைஞர்கள்-மாணவர்கள் ஆகியோர் காவல்துறையின் அடக்குமுறையை மீறி, நாடாளுமன்ற முற்றுகைப் பேரணியை நடத்தினார்கள்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பது டெல்லியில் போராடும் இளைஞர் பட்டாளத்தின் முக்கியமான கோரிக்கையாகும். இதே ஒன்றிய அமைச்சர்தான் திராவிட மாடல் ஆட்சியின் போது, தமிழ்நாட்டில் தேசியக் கல்விக் கொள்கையையும் மும்மொழித் திட்ட த்தையும் ஏற்காவிட்டால் கல்விக்கான ஒன்றிய அரசின் நிதியைத் தர மாட்டோம் என்று சொல்லி, 2,291 கோடி ரூபாய் நிதியைத் தர மறுத்தார். அப்போதும் திராவிட மாடல் அரசு மாநில உரிமையையும், தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையையும் விட்டுத் தர மாட்டோம் என உறுதியாக நின்று, மாநில அரசு நிதியிலிருந்தே பள்ளிக் கல்விக்கான கட்டமைப்புகளையும், ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும் மேற்கொண்டது.

**தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு ஏற்க மறுத்த ஒன்றிய அரசின் மும்மொழிப் பாடத் திட்டத்திற்கு இந்தியாவில் இன்று பல மாநிலங்களும் எதிர்ப்பு தெரிவிப்பதுடன், உச்சநீதிமன்ற நீதிபதியே சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் மூன்று மொழிகளைத் திணிப்பது மாணவர்களுக்கு பெரும் சுமையாகிவிடும் என அறிவுறுத்தியிருக்கிறார்.** மூன்றாவது மொழி என்ற பெயரில் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிப்பதிலேயே ஒன்றிய பா.ஜ.க. அரசு முனைப்பாக இருக்கிறது. இது இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும், அட்டவணையில் இடம்பெறாத இன்னும் பல மொழிகளையும் எதிர்காலத்தில் அழித்துவிடும் ஆபத்து உண்டு என்பதை வரலாற்றுப் பின்னணியுடன் நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் எடுத்துரைத்து வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

தாய் மொழியைக் காப்பதற்காக 193739ஆம் ஆண்டுகளில் முதல் இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் திராவிட இயக்கம் உறுதியாக நின்றது. நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் இணைந்து நடத்திய அந்த மொழிப் போராட்டத்தில், தந்தை பெரியார் பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார். சைதாப்பேட்டை கிளைச்சிறையில் பேரறிஞர் அண்ணா அடைக்கப்பட்டார். 14 வயது பள்ளிச் சிறுவனாகத் தமிழ்க் கொடி ஏந்திப் போராடினார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தப் போராட்டக் களத்தில் சிறை சென்ற நடராசன்-தாலமுத்து என்ற இரண்டு இளைஞர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்து, கட்டாய இந்தியைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்டியடித்தனர்.

1964-65ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் கீழப்பழுவூர் சின்னசாமி தொடங்கி பல இளைஞர்கள், ‘தமிழ் வாழ்க.. இந்தி ஒழிக’ என்ற முழக்கத்துடன் தீக்குளித்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் சிவகங்கை இராசேந்திரனும், கோவை மாவட்ட இளைஞர்களும் போலீஸ் மற்றும் துணை ராணுவத்தின் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு பலியாகி, தாய்மொழிக் காக்கும் போராட்டத்தில் தங்கள் உயிரை ஈந்தனர். எண்ணற்ற இளைஞர்கள் சிறை சென்றனர். தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார் கலைஞர். தமிழ்நாட்டில் தி.மு.க. முன்னெடுத்த அந்தப் போராட்டம் இந்தியாவில் உள்ள இந்தி பேசாத மாநிலங்களின் தாய்மொழியை இன்றளவும் காத்து நிற்கிறது.

**இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று வரையறுக்கிறது நமது அரசியல் சட்டம். அதனால், மாநிலங்களுக்கு அதிக உரிமைகளுடனான சுயாட்சி முறையும், மாநிலங்களின் ஒருங்கிணைப்பில் இந்திய ஒன்றியத்தின் கூட்டாட்சி முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் நாடு வலுவாக இருக்கும் என்பதை மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா உரக்கக் கூறினார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1974ஆம் ஆண்டு மாநில சுயாட்சித் தீர்மானத்தை முத்தமிழறிஞர் கலைஞர் நிறைவேற்றி னார். தமிழ்நாட்டில் தி.மு.க. முன்னெடுத்த மாநில உரிமைக் குரல் இன்று இந்திய அளவில் பல மாநிலங்களிலும் எதிரொலிக்கிறது.** ஆளுநர்களைக் கொண்டு ஒன்றிய அரசு நடத்த நினைக்கும் இணை அரசுக்கு, நீதிமன்றம் மூலம் கடிவாளம் போடும் செயலையும் தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு முன்னெடுத்தது.

சாதிப் படிநிலை இறுகிப் போயுள்ள இந்திய சமூகத்தில் கல்வியும் வேலைவாய்ப்பும் அனைத்து சமுதாயத்தினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1921ஆம் ஆண்டில் நீதிக் கட்சி ஆட்சிக் காலத்திலேயே சென்னை மாகாணத்தில் வகுப்புவாரி இடஒதுக்கீடு அரசாணை கொண்டு வரப்பட்டு, 1928ஆம் ஆண்டு வாக்கில் அது நடைமுறைக்கு வந்தது. இடஒதுக்கீட்டைக் காப்பாற்றுவதற்காக இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தை செய்யக் காரணமானதும் திராவிட இயக்கங்களின் போராட்டங்கள்தான். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் இன்று அனைத்து சமுதாயத்தினருக்குமான 69% இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது.

**தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட இடஒதுக்கீட்டு முறையின் தொடர்ச்சியாக, சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் ஆட்சிக்காலத்தில் இந்திய அளவில் மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு கிடைக்கச் செய்வதற்குத் துணை நின்றதும் திராவிட இயக்கங்கள்தான். இன்று இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சமூக நீதி பேசப்படுவதற்கு திராவிட இயக்கமே, குறிப்பாக தி.மு.க.வே அரசியல்ரீதியாக அடித்தளமிட்டது.**

**இடதுக்கீடு நடைமுறை தொடங்கி ‘நீட்’ எதிர்ப்பு வரை கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்கிய போராட்டங்கள் இன்று இந்திய அளவில் எதிரொலிக்கின்றன. இளைஞர்கள் எழுச்சியுடன் களம் காண்கிறார்கள். திராவிடம் வகுத்த பாதை, இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது.**

---

தமிழ்நாட்டில் ஜவுளித்துறையை மேம்படுத்த

## ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

### மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 22-

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டு ஜவுளித்துறை 2100 கோடி அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடைய ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? என்றும் ஜவுளித்துறை இயந்திரங்களை நவீனப் படுத்தவும் சிறு,குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை பாதுகாக்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :-

2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு, 2100 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான ஜவுளி ஏற்றுமதியை எட்டுவதற்கும் குறிப்பாக திருப்பூருக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள 1150 கோடி அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடையவும் ஒன்றிய அரசு வகுத்துள்ள செயல் திட்டம் என்ன? இதற்காக எடுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் கொள்கை நடவடிக்கைகள் என்ன?

விருதுநகரில் அமைக்கப்படும் பி.எம்.மித்ரா (PM-MITRA), மெகா ஜவுளிப் பூங்கா தற்போது எந்த நிலையில் உள்ளது? நிலம் கையகப்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகள், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரம், ஜவுளி பூங்கா செயல்பட தொடங்கும் கால வரையறை ஆகியன குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்குமா?

ஜவுளித்துறை இயந்திரங்களை நவீனமயமாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர் போன்ற ஜவுளித் தொழிலை மையமாகக் கொண்ட நகரங்களில் உள்ள சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு (MSMEs) வழங்கப்படும் நிதி உதவியின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் பெண் ஜவுளித் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதிகள் மற்றும் புதிய ஜவுளித்தொழில்மையங்கள் அமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டு ள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

செயற்கை இழை (Man-Made Fibre) மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த ஜவுளி உற்பத்திக்கு மாறும் நிலையில், தமிழ்நாட்டில் பருத்தி சார்ந்த சிறு,குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை பாதுகாக்கவும், அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படாமல் இருக்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

---

பெரம்பூர் தொகுதி தேர்தல் வழக்கு:

## முதலமைச்சர் விஜய்க்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 22 –

2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்ட தவெக தலைவர் விஜய் வெற்றி பெற்றார். எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி. சேகர், விஜய் வெற்றியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அதே போல் தொகுதி வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோரும் மனு தாக்கல் செய்திருந்தனர். ஆர்.டி.சேகர் தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்கில், (GFX IN) வேட்பு மனுவில் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கி இருப்பதாகவும். சொத்து விவரங்கள் மற்றும் வழக்குகள் விவரங்கள் முறையாக தெரிவிக்கவில்லை என்பதால் விஜயின் வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் விசாரணைக்கு வந்தது.

இதையடுத்து விஜய் மற்றும் தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருக்கு புதிதாக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்தார்.

---

திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

## பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் - பள்ளிப்பட்டு பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம், பள்ளிப்பட்டு பேரூர்க் கழகப் பொறுப்பாளர் சிஜே.செந்தில்குமார் அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **டி.விஜியலு** (24, பேரி தெரு, பள்ளிப்பட்டு 631 207, திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் பள்ளிப்பட்டு பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 21.07.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதுதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி சிவா எம்.பி. தலைமையில் கழக மாநிலங்களவை உறுப்பினர்கள் பச்சை துண்டு அணிந்து போராட்டம் நடத்தினர்.இதில் தே.மு.தி.க எம்.பி. எல்.கே. சுதீஷ், மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்றனர்.